1978 பிப்ரவரி 27]

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது எத்தனை நாளாக ஆய்வில் உள்ளது ? எத்தனை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்யப்பட்டிருக்கிறது ? எப்பொழுதுதான் அது முடிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, முதலிலே ஒரு திட்டத்தை 1968 இல் தீட்டினார்கள். அதன்படி 1996 ஆம் ஆண்டு 20,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுதே 24,000 மக்கள் தொகை வந்துவிட்டது. ஆகையினால் மணிமுத்தாறிலிருந்து தண்ணீர் கொண்டுவர ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு இன்வெஸ்டிகேஷன் சார்ஜ்—ஆய்வுத் தொகை—ரூபாய் 27,200. விரைவிலே ஆய்வை முடித்து மேற்கொண்டு காரியங்கள் செய்யப்படும்.

சின்ன சேலத்திற்கு குடிநீர் வழங்கல்.

* 293. வினா—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோமுகி அணைக்கட்டில் இருந்து சின்ன சேலம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் கொண்டுவர அரசு முயற்சி ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, சின்ன சேலம் நகருக்கு நெடுநாட்களாகக் குடிநீர்ப் பஞ்சம் இருந்துகொண்டு வருகிறது. என்வே, கோமுகி அணைக் கட்டின் மேல் மட்டத்திலேயிருந்து சின்னசேலத்திற்குத் தண்ணீர் கொண்டுவர இருப்பதாக அறிகிறேன். அது எவ்வளவு விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் செலவில் ஆய்வில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். மிக விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*294. வினா—

மாயூரம் வட்டத்தில் குடியிருப்பு மனைகள் வழங்கல்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —